தமிழ்நாடு வன சீருடைப் பணியாளர்கள் தேர்வுக் குழுமம்
TAMIL NADU FOREST UNIFORMED SERVICES RECRUITMENT COMMITTEE
8வது கீழ் தளம், எண்.01 ஜீனிஸ் சாலை, பனகல் மாளிகை, சைதாப்பேட்டை, சென்னை–600 015.
8th Down Floor, Panagal Maaligai
No.01, Jeenis Road, Saidapet, Chennai - 600 015.
Phone No. / தொலைபேசி எண். 044- 2434 1251
Website : www.forests.tn.gov.in Email Id : tnfusrc.tnchn@nic.in

## வனக்காப்பாளர் மற்றும் ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புதல் (விளம்பர எண். 2/2019, நாள்: 30.11.2019)

***

### வனக்காப்பாளர் / ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர் பதவிகளுக்கான உடற்திறன் தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகள்

- உடற்திறன் தேர்வில் (நடைத்தேர்வில்) கலந்துகொள்ளும் **ஆண் விண்ணப்பதாரர்கள் 4 மணி நேரத்திற்குள் 25 கி.மீ. தூரத்தை** கடக்கவேண்டும்.
- உடற்திறன் தேர்வில் (நடைத்தேர்வில்) கலந்துகொள்ளும் **பெண் விண்ணப்பதாரர்கள் 4 மணி நேரத்திற்குள் 16 கி.மீ. தூரத்தை** கடக்கவேண்டும்.
- வண்டலூரிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் **ஜனவரி 19ஆம் நாள் (2021)** உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) நடத்தப்படும். காலை 7.00 மணிக்கு ஆஜராக வேண்டும்.
- இது ஒரு சிப் (Chip) அடிப்படையிலான தேர்வு ஆகும். மார்பில் அணியும் வசதி கொண்ட துணியில் உள்ள சிப்பில் (Chip) நேரம் தானாகவே பதிவு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் சிப்பின் செயல்பாடுகளில் இடையூறு ஏற்படுத்தாமல் இருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) நடைபெறும் இடத்திலேயே விண்ணப்பதாரர்களுக்கு மார்பில் அணியும் வசதி கொண்ட துணியுடன் கூடிய சிப் வழங்கப்படும்.
- குறிப்பிட்ட கால இடைவெளியில் சிறு குழுக்களாக பிரிக்கப்பட்டு காலை 8.00 மணி முதல் உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) தொடங்கப்படும்.
- ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் நேரம் தனித்தனியே கணக்கிடப்படும். விண்ணப்பதாரர் துவக்கக்கோட்டில் தொடங்கிய நேரம் முதல் இறுதிக்கோட்டினை கடக்கும் காலம் வரை கணக்கிடப்படும்.

- உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) 2.5 கி.மீ. கொண்ட சுற்றுவட்ட தடப்பாதையில் நடத்தப்படும். சுற்றுவட்ட எண்ணிக்கை, நேரம் மற்றும் தூரம் அதற்குரிய கருவியினால் கணக்கிடப்படும்.
- விண்ணப்பதாரர்களின் வசதிக்காக சுற்றுவட்ட எண்ணிக்கையினைக் கணக்கிட பல்வேறு வண்ணங்கள் கொண்ட சுற்று எண்களுடன் கூடிய டோக்கன்கள் இருக்கும். விண்ணப்பதாரர்கள் சரியான சுற்று எண் கொண்ட டோக்கனை எடுத்துக்கொள்ள வேண்டும். (ஆனால் தூரம் மற்றும் சுற்று எண்ணைக் கணக்கிட டோக்கன்கள் அதிகாரபூர்வமாக பயன்படுத்தக் கூடாது. உரிய கருவியிலிருந்து பெறப்படும் நேரம் மற்றும் தூரம் மட்டுமே அதிகாரபூர்வமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).
- ஆண் விண்ணப்பதாரர்கள் தங்களது 8, 9 மற்றும் 10வது சுற்றுகளின் துவக்கத்தில் அவர்களது பதிவு செய்யப்பட்ட கைபேசியில் எச்சரிக்கை குறுஞ்செய்திகளைப் (SMS alert) பெறுவர். பெண் விண்ணப்பதாரர்கள் தங்களது 4, 5 மற்றும் 6வது சுற்றுகளின் துவக்கத்தில் அவர்களது பதிவு செய்யப்பட்ட கைபேசியில் எச்சரிக்கை குறுஞ்செய்திகளைப் (SMS alert) பெறுவர்.
- விண்ணப்பதாரர்கள் தங்களுக்கு தேவையான குடிநீர் பாட்டில்களை தாங்களே கொண்டு வருதல் வேண்டும். தேவையான குடிநீர் 2.5 கி.மீ. கொண்ட சுற்றுவட்டப்பாதை முழுவதிலும் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கோவிட்–19 பரவலை முன்னிட்டு விண்ணப்பதாரர்கள் தங்கள் புத்துணர்விற்கு தேவையான பானம், பழங்கள், குளுக்கோஸ், வாய்வழி மறுநீரேற்ற உப்புக் கரைசல் போன்றவைகளை தாங்களே கொண்டுவருதல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் தங்களது நேரம் மற்றும் தூரம் தொடர்பான புள்ளியியல் விவரங்களுக்காக தங்களது ஸ்மார்ட் போன்கள், ஸ்மார்ட் கைக்கடிகாரங்கள் போன்றவற்றை வைத்துக்கொள்ளலாம்.
- உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) நடைபெறும் 2.5 கி.மீ. நீளமுள்ள தடகளப்பாதை முழுவதையும் கண்காணிக்கும் வகையில் கண்காணிப்புக்கேமரா பொருத்தப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்களின் அசைவுகள் (நகர்வுகள்) தொடர்ந்து கண்காணிக்கப்படும் .
- விண்ணப்பதாரர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றவாறு காலணியுடன் நாகரீகமான முறையில் உடை அணிந்து வரலாம்.

- ஒரே நேரத்தில் அனைத்து பாலினத்தவர்களுக்கும் உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) நடத்தப்படும்.
- உடற்திறன் தேர்வு (நடைத்தேர்வு) நடத்தப்படும் தடப்பாதையானது தார் ரோடு ஆகும்.

**நாள்: 17.12.2020** **உறுப்பினர், தநாவசீபதேகு.**